# அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நாகர்கோவில் – 629 004.

முனைவர்.மு. சுசீலாபாய்,*M.A., M.Phil, Ph.D.,*
முதல்வர் (மு.கூ.பொ)
*தொலைப்பேசிஎண். 04652 264312*
*மின்னஞ்சல் முகவரி : gascnagercoil@gmail.com*


**செய்தி** **நாள் :30.05.2025**

நாகர்கோவில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 2025-26-ஆம் கல்வியாண்டிற்கான முதலாமாண்டு இளம் கலை/ அறிவியல் மாணவ, மாணவிகள் சேர்க்கை பின்வரும் நாட்களில் நடைபெற உள்ளது.

| வ.எண் | நாள் (காலை 9 மணி) | சேர்க்கை நடைபெறும் பாடப்பிரிவுகளின் விவரம் |
|---|---|---|
| 1 | 02.06.2025 | சிறப்பு ஒதுக்கீடு அனைத்துப் பாடப்பிரிவினருக்கும் (முன்னாள் இராணுவத்தினரின் வாரிசு, பாதுகாப்புப்படை வீரர்களின் குழந்தைகள், மாற்றுத் திறனாளி, தேசிய மாணவர் படை, விளையாட்டு பிரிவு மாணவ, மாணவிகள் மற்றும் அந்தமான் நிக்கோபார் மாணாக்கர்) |
| 2 | 04.06.2025 | வணிகவியல், வணிக நிர்வாகவியல் மற்றும் பொருளியல் (B.Com, BBA and B.A-Economics) |
| 3 | 05.06.2025 | இளம் அறிவியல் பாடப் பிரிவுகள் (கணிதம், இயற்பியல், விலங்கியல், புள்ளியியல்,கணினிஅறிவியல் மற்றும் தாவரவியல்) |
| 4 | 06.06.2025 | இளங்கலைப் பாடப் பிரிவுகள் (தமிழ், ஆங்கிலம் மற்றும் வரலாறு ) |

சுழற்சி I மற்றும் II உள்ள பாடப்பிரிவுகளுக்கும் மேற்குறிப்பிட்ட நாளிலேயே கலந்தாய்வு நடைபெறும். மாணவ, மாணவிகள் தங்கள் தரவரிசைப் பட்டியல் விவரங்களை கல்லூரி இணைய தள முகவரியில் (www.gascnagercoil.in) தெரிந்து கொள்ளவும்.

கல்லூரியில் நேரடியாக நடைபெறும் கலந்தாய்வில், மாணவ,மாணவிகள் மேற்குறிப்பிட்ட நாட்களில் பின்வரும் சான்றுகளை கொண்டுவர வேண்டும்.

1) இணையவழியாக விண்ணப்பித்த படிவம் (2 எண்ணிக்கை),
2) பாஸ்போட் புகைப்படம்- (2 எண்ணிக்கை),
3) 10, +1, +2மதிப்பெண் பட்டியல் நகல்கள்,
4) மாற்றுச் சான்றிதழ்- அசல் (TC) (Emis எண் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்),
5) சாதிச் சான்றிதழ் நகல்,
6) வருமான சான்றிதழ் நகல்,
7) தமிழ் வழி பயின்றதற்கான சான்று (6 முதல் 12ம் வகுப்பு வரை),
8) ஆதார் அட்டை நகல்,
9) வங்கிக் கணக்கு புத்தக நகல் (ஆதாருடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்)

சேர்க்கை பெற்ற மாணவ, மாணவிகள் கட்டணத்தை கல்லூரி அலுவலகத்தில் செலுத்திட அறிவுறுத்தப்படுகிறார்கள்.

சுசீலாபாய்
30|05|2025
Principal
Government Arts and Science College
Nagercoil - 629 004.